# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 254/2022

சாட்சி : PW1

பெயர் : முத்துசாமி தேதி: 02-04-2025

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவா 1வது அயிட்ட சொத்து வா.த.சா.ஆ-A1 கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா 2வது அயிட்ட சொத்து வா.த.சா.ஆ-A2 கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா 3வது அயிட்ட சொத்து பி.வா.த.சா.ஆ-B1 கிரய ஆவணப்படி பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். தாவா 3வது அயிட்ட சொத்தில் நான் மாணிக்கத்திற்கு கிரயம் செய்து கொடுத்த 2170 சதுரடி போக மீதி 680 சதுரடி எனக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். 29.04.2021ம் தேதியில் நான் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரய உடன்படிக்கை செல்லாது என்று சொல்லி இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். சாட்சியிடம் காட்டப்படும் 29.09.2021 தேதியிட்ட கிரய உடன்படிக்கை நானும், வாதியும் செய்து கொண்டது என்று சொன்னால் சரியல்ல. 29.09.2021ம் தேதி கிரய உடன்படிக்கை செய்து கொண்டு நான் வாதியிடம் தாவா 1,2 அயிட்ட சொத்தின் கிரய அசல் ஆவணங்களை கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் அசல் ஆவணங்களை நான் வாதியிடம் கொடுத்து தான் பணம் வாங்கினேன். தாவா 3வது அயிட்ட சொத்திற்கான அசல் பத்திரங்களை நான் தரவில்லை. கிரய உடன்படிக்கை 29.09.2021 காலத்தில் அரசு தேதிய நெடுஞ்சாலைக்காக தாவா சொத்தின் ஒரு பகுதியை எடுத்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். அவ்வாறு எடுத்துக்கொண்ட நிலம் போக மீதி நிலம் தனியாக உட்பிரிவு செய்யப்படவில்லை

என்றால் ஆமாம். தாவா சொத்தில் தற்காலிகமாக செட் போட்டு லாரி ஒர்க் ஷாப் நடத்தி வருகிறேன் என்றால் 20 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். சொத்தை விற்கும் நோக்கத்தில் தான், வாதியிடம் கிரய உடன்படிக்கை செய்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. கடனுக்காக பூர்த்தி செய்யப்படாத பாண்ட் பேப்பர், பச்சை தாள்களில் கையெழுத்து போட்டு கொடுத்ததாக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் தாவா சொத்தை விலை பேசி ரூ. 40,00,000/- முன்பணமாக பெற்றுக்கொண்டு கிரய உடன்படிக்கை செய்துகொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் ரூ. 20,00,000/- கடன் வாங்கியதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த தொகைக்கு வட்டி கொடுத்தற்கான ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. வாதி ரசீது எதுவும் தரவில்லை. சொத்தை விற்பனை செய்யவேண்டி கிரய உடன்படிக்கை செய்து கொண்டதால் வட்டி என்ற பேச்சிற்கே இடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 1 கோடி 50 இலட்சம் விலை உள்ளது என்பது சம்மந்தமாக வழிகாட்டி மதிப்பீடு இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிரய உடன்படிக்கை காலத்தில் தாவா சொத்தின் சதுரடி மதிப்பு ரூ.900/- என்பதால் தான் அதற்காகத்தான் கிரய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் நான் கிரய உடன்படிக்கை ஏதும் செய்யவில்லை. தாவா சொத்தில் உள்ள செட்டுகள் தற்காலிகமானது என்றும், கிரயம் செய்யும் காலத்தில் அவைகளை அகற்றி தருவதாக கூறியதால் தான் கிரய உடன்படிக்கை செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அரசு கையகபடுத்திய நிலங்கள் போக மீதி நிலங்களை நான் அளந்து கொடுக்காததால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்று சொன்னால்

சரியல்ல. கிரய உடன்படிக்கை பத்திரத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும், பொய்யாக நான் வெற்று பத்திரங்களில் கையெழுத்து போட்டதாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 180/2022 தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.